**எஉ. மாணிக்கங்கள்**

சுழிசுத்த மாயிருந்(து) அதிலும் படைக்கான
துரகம்ஓர் மாணிக் கம்ஆம்:
சூழ்புவிக் கரசனாய் அதிலேவி வேகமுள
துரையுமோர் மாணிக் கம்ஆம்:
பழுதற்ற அதிரூப வதியுமாய்க் கற்புடைய
பாவையோர் மாணிக் கம்ஆம்
பலகலைகள்:கற்றறி அடக்கமுள பாவலன
பார்க்கிலோர் மாணிக் கம்ஆம்
ஒழிவற்ற செல்வனாய் அதிலே விவேகியாம்
உசிதனோர் மாணிக் கம்ஆம்
உத்தம குலத்துதித்(து) அதிலுமோ மெய்ஞானம்
உடையனோர் மாணிக் கம்ஆம்
அழிவற்ற வேதாக மத்தின்வடி வாய்விளங்(கு)
அமலனே! அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுரதே வனே!

(இ-ள்) அழிவுஅற்ற வேதஆகமத்தின் வடிவாய் விளங்கு அமலனே - கெடுதல் மறைவடிவாயும் ஆகம வடிவாயும் விளங்கும் தூயவனே!, அருமை........... தேவனே!, சுழி சுத்தமாய் இருந்து, அதிலும் படைக்கு ஆன துரகம்ஓர் மாணிக்கம் ஆம் - தூய சுழிகளுடன் போருக்கும் பயன்படும் குதிரை ஒரு மாணிக்கம் போன்றது, சூழ்புவிக்கு அரசனாய் அதிலே விவேகம்உள துரையும் ஓர் மாணிக்கம் ஆம் - சூழும் உலகிற்கு மன்னனாகி மேலும் அறிவும் உடைய தலைவன் ஒரு மாணிக்கம் போன்றவன், பழுதுஅற்ற அதிரூப வதியுமாய்க் கற்புஉடைய பாவை ஓர் மாணிக்கம் ஆம் - குற்றமற்ற சிறந்த அழகும் கற்பும் உடைய மங்கை ஒரு மாணிக்கம் போன்றவள், பல கலைகள் கற்றுஅறி அடக்கம்உள பாவலன் பார்க்கில் ஓர் மாணிக்கம் ஆம் - பலவகையான கலைகளைப் படித்தறிந்து அடக்கமாயிருக்கும் பாவலன் ஆராயின் ஒரு மாணிக்கம் போன்றவன், ஒழிவுஅற்ற செல்வனாய் அதிலே தியாகியாம் உசிதன்ஓர் மாணிக்கம் ஆம் - அளவில்லாத செல்வத்துடன் மேலுங் கொடையாளியுமான உயர்ந்தோன் ஒரு மாணிக்கம் போன்றவன், உத்தமகுலத்து உதித்து அதிலும் மெய்ஞ்ஞானம் உடையன் ஓர் மாணிக்கம் ஆம் - நல்ல குடியிற் பிறந்து மேலும் மெய்யறிவும் உடையவன் ஒரு மாணிக்கம் போன்றவன்.

**எங. உண்டியிலையும் முறையும்**

வாழையிலை புன்னைபுர(சு) உடன்நற் குருக்கத்தி
மாப்பலாத் தெங்கு பன்னீர்
மாசிலமுத்(து) உண்ணலாம்: உண்ணாத வோஅரசு
வனசம் செழுமபா டலம்
தாழையிலே அத்திஆல் ஏரண்ட பத்திரம்

சகதேவம் முள்மு ருக்குச்
சாருமிவை அன்றி, வெண் பாலெருக்(கு) இச்சில் இலை
தனினும்உண டிடவொ ணதால்
தாழ்விலாச் சிற்றுண்டி நீரடிக் கடிபருகல்
சாதங்கள பலஅ ருந்தல்
சற்றுண்டல் மெத்தவூண் இத்தனையும் மெய்ப்பிணி
தனக்கிடம் எனக்க ருகிடார்
ஆழிபுடை சூழுலகில் வேளாளர் குலதில்கன்
ஆகும்எம(து) அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுரதே வனே!

(இ-ள்) ஆழிபுடை சூழ்உலகில் வேளாளர் குலதிலகல் ஆகும்-நாற்புறமும் கடல் சூழ்ந்த உலகில் வேளாளர் மரபிற் சிறப்புற்றவன் ஆகிய, எமது அருமை........... தேவனே! வாழையிலை, புன்னை, பரசுடன், நல்குருக்கத்தி, மா, பலா, தெங்கு, பன்னீர் (ஆகிய இலைகளில்) மாசுஇல் அமுது உண்ணலாம் - குற்றமற்ற உணவை உண்ணலாம், உண்ணாதவோ - உண்ணத்தகாதனவோ எனில் - அரசு வனசம், செழும்பாடலம், தாழையிலை, அத்தி, ஆல், ஏரண்ட பத்திரம், சகதேவம், முள்முருக்கு, சாரும் இவை அன்றி-பொருந்திய இவற்றிலே அன்றி, வெண்பால் எருக்கு இச்சில் இலைதனினும் உண்டிட ஒணாது ஆம்-வெண்மையான பாலையுடைய எருக்கிலை, இச்சில் இலைகளிலும் உண்பது தகாது ஆகும், தாழ்வுஇலாச் சிற்றுண்டி, நீர் அடிக்கடி பருகல், சாதனங்கள் பல அருந்தல்-இடைவிடாத சிற்றுண்டியும் அடிக்கடி நீர் பருகலும் பலவகைச் சோறுண்டலும், சற்றுஉண்டல் மெத்தவூண் இத்தனையும் மெய்ப்பிணி தனக்கு இடம்எனப் பருகிடார் - சிறிதாக உண்பதும் மிகுதியாக உண்பதும் இவ்வளவும் உடல்நோய்க்கு இடமாகும் என (இம்முறையில்) உண்ணார்.

(வி-ரை) வனசம்-தாமரையிலே, செழும்படலம்-வள மிக்க பாதிரி ஏரண்ட பத்திரம்-ஆமணக்கு இலை, இச்சில் இலை-இத்தியிலை சாதங்கள் பல: தயிர்ச்சோறு, புளிச்சோறு, சருக்கரைப் பொங்கல், வெண்பொங்கல் முதலானவை. பருகுதல் நீர் முதலிய குடிவகைகளுக்கே வரும், உணவுக்குக் கூறுதல் மரபு வழுவமைதி. மிகினும் குறையினும் நோய் செய்யும் என்னும் வள்ளுவர் வாய் மொழி கருதி சற்றுண்டல் மெத்தவூண் கெடுதி யென்றார். இச்செய்யுளில் இந்நூலாசிரியரை ஆதரவுசெய்த மதவேளின் குலம் வேளாளர் குலம் என அறியப்படுகிறது.

**எச. கவிஞர் வறுமை**

எழுதப் படிக்கவகை தெரியாத மூடனை
இணையிலாச் சேடன் என்றும்
ஈவதில் லாதகன லோபியைச் சபையதனில்
இணையிலாக் கர்ணன் என்றும்

அழகற்ற வெகுகோர ரூபத்தை யுடையோனை
அதிவடிவ மாரன் என்றும்
ஆயுதம் எடுக்கவுந் தெரியாத பேடிதனை
ஆண்மைமிகு விசயன் என்றும்
முழுவதும் பொய்சொல்லி அலைகின்ற வஞ்சகனை
மொழி அரிச் சந்திர னென்றும்
மூதுலகில் இவ்வணம் சொல்லியே கவிராசர்
முறையின்றி ஏற்ப தென்னோ?
அழல்என உதித்துவரு விடம்உண்ட கண்டனே!
அமலனே! அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுரதே வனே!

(இ-ள்) அழல்என உதித்துவரு விடம்உண்ட கண்டனே - நெருப்பைப்போலத் தோன்றி வந்த நஞ்சுண்ட கழுத்தையுடையவனே!, அமலனே-குற்றம் அற்றவனே! அருமை.......தேவனே! எழுதப்படிக்க வகைதெரியாத மூடனை இணைஇலாச் சேடன் என்றும் - எழுதவும் படிக்கவும் வழியறியாத பேதையை ஒப்பற்ற ஆதிசேடன் என்றும், ஈவது இல்லாத கனலோபியைச் சபைதனில் இணைஇலாக் கர்ணன் என்றும்-கொடுத்தறியாத பெரிய அழுக்கனை அவையிலே ஒப்பற்ற கொடையிற்சிறந்த கர்ணன் என்றும், அழகுஅற்ற வெகு கோரரூபத்தை உடையோனை அதிவடிவ மாரன் என்றும்-அழகு இல்லாத மிகுந்த அருவருப்பான உருவமுடையவனைப் பேரழகுடைய காமன் என்றும், ஆயுதம் எடுக்கவும் தெரியாத பேடிதனை ஆண்மைமிகு விசயன்என்றும்-படையேந்தவும் பழகாத ஆண்மையற்றவனை வீரத்திற் சிறநத விசயன் என்றும், முழுவதும் பொய்சொல்லி அலைகின்ற வஞ்சகனை மொழி அரிச்சந்திரன் என்றும்-முற்றிலும் பொய்புகன்று திரியும் வஞ்சகனைச் சொல்லில் அரிச்சந்திரன் என்றும், இவ்வணம் மூதுலகில் கவிராசர் சொல்லியே முறையின்றி ஏற்பது ஏன்னோ-இவ்வாறு பழமையான இந்த உலகத்திற் பாவலர்கள் புகன்று தகுதியின்றி இரப்பது என்ன காரணமோ?

(வி-ரை) ஆதிசேடன் கல்வியிற் சிறந்தவன். முதுமை+உலகு - மூதுலகு.

(க-து) முற்காலத்தால் வறுமை மிகவும் கொடியதாகையாற் புலவர்கள் ஒருவனுக்கு இல்லாத சொல்லிப் புகழ்தல் இயற்கையாக இருந்தது.

**கவிஞன்**

தெள்ளமிர்த தாரையென மதுரம் கதித்தபைந்
தேன்மடை திறந்த தெனவே
செப்புமுத் தமிழினொடு நாற்கவிதை நாற்பொருள்
தெரிந்துரைசெய் திறமை யுடனே
விள்ளரிய காவியத் துட்பொருள்அலங்காரம்
விரிவிலக கணவி கற்பம்
வேறுமுள தொன்னூல் வழக்கும்உல கத்தியல்பும்

மிக்கப்ர பந்த வண்மை
உள்ளவெல் லாமறிந்(து) அலையடங் குங்கடலை
யொத்ததிக சபைகண் டபோ(து)
ஓங்கலையொல்க்கின்ற கடல்போற்பர சங்கம(து)
உரைப்பவன் கவிஞு னாகும்!
அள்ளிவிடம் உண்டகன் வாயனே!: நேயனே!:
அமலனே!அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுரதே வனே!

(இ-ள்) விடம்அள்ளி உட் கனி வாயனே-நஞ்சை அள்ளிப்பருகிய கனிபோலுஞ் சிவந்த வாயனே! நேயனே-(உயிர்களிடம்) அன்புடையவனே!, அமலனே-தூயவனே!,அருமை........தேவனே! தெள்அமிர்த தாரையென மதுரம் கதித்த பைந்தேன் மடைதிறந்தது என - தெளிந்த அமுதபொழுக்குப் போலவும், செப்பும் முத்தமிழினொடு - சொல்லப்படும் முத்தமிழுடன், நாற்கவிதை நாற்பொருள் தெரிந்து-நால்வகைக் கவிகளையும் நால்வகைப் பொருளையும் அறிந்து, உரைசெய் திறமையுடனே-கூறும் ஆற்றலோடும், விள்அரிய காவியத்து உட்பொருள் அலங்காரம், விரிவு இலக்கண விகற்பம்-கூறுதற்கரிய காவியத்தின் உட்பொருளையும் அணியையும் விரிவான ஐவகை யிலக்கணத்தையும், வெறும்உள தொன்னூல் வழக்கும் உலகத்து இயல்பும் மிக்கப் பிரபந்த வண்மை உள்ள் எல்லாம் அறிந்து-மற்றும் இருக்கின்ற பழமையான நூல்வழக்கையும் உலக வழக்கையும் மிகுந்த பிரபந்தங்களின் சிறப்பையும் மேலும் உள்ள யாவற்றையும் அறிந்து, அலை ஒடுங்கும் கடலைஒத்து-அலை அடங்கிய கடலைப்போல விருந்து, அதிகசபை கண்டபோது-பேரவையைப் பார்த்த காலத்தில், ஓங்குஅலை ஒலிக்கின்ற கடல்போல் பிரசங்க மது உரைப்பவன் கவிஞன் ஆகும்-பேரலை முழங்கும் கடலைப்போலச் சொற்பொழிவு செய்பவன் கவிஞன் ஆவான்.

(வி-ரை) முத்தமிழ்: இயல்,இசை, நாடகம், நாற்கவிதை, ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம், நாற்பொருள் அறம், பொருள், இன்பம், வீடு, இலக்கண விகற்பம் எழுத்து: சொல், பொருள்,யாப்பு,அணி. பிரபந்தம்: சிறு நூல்கள் அவை: பிள்ளைத்தமிழ் பரணி கலம்பகம் முதலியன.

**எசு. நற்சார்பு**

காணரிய பெரியோர்கள் தரிசனம் லபிப்பதே
கண்ணிணைகள் செய்புண் ணியம்
கருணையாய் அவர்சொல்மொழி கேட்டிட லபிப்பதுஇரு
காதுசெய் திடுபுண் ணியம்
பேணிஅவர் புகழையே துதிசெய லபித்திடுதல்
பேசில்வாய் செய்புண்ணியம்
பிழையாமல் அவர்தமைத் தொழுதிட லபிப்பதுகை
பெரிதுசெய் திடுபுண் ணியம்
வீணெறிசெ லாமலவர் பணிவிடை லபிப்பதுதன்

மேனிசெய் திடுபுண் ணியம்
விழைவெடவர் சொற்படி நடந்திட லபிப்பதே
மிக்கபூ ருவபுண்ணியம்
ஆணவம் எனுங்களை களைந்தறி வினைத்தந்த
அண்ணலே! அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுரதே வனே!

(இ-ள்) ஆணவம் எனும் களைகளைந்து அறிவினைத் தந்த அண்ணலே- நான் என்னும் களையை யெடுத்து, அறிவையருளிய பெரியோனே!, அருமை.........தேவனே! காண்அரிய பெரியோர்கள் தரிசனம் லபிப்பது கண்இணைகள்செய் புண்ணியம்-பார்த்தற்கரிய பெரியோர்களின் சேவை கிடைப்பது இருவிழிகளின் நல்வினையாகும், கருணையாய் அவர் சொல்மொழி கேட்டிட லபிப்பது இருகாது செய்திடு புண்ணியம்-அவர்கள் அருளுடன் கூறும் மொழியைக் கேட்கக் கிடைப்பது இருகாதுகளும் செய்த நல்வினையாகும், அவர் புகழையே பேணித் துதிசெய லபித்திடுதல் பேசில்வாய் செய்புண்ணியம்-அவர்களுடைய புகழையே விரும்பிப் போற்றிடக் கிடைப்பது கூறினால் வாய்செய்த நல்வினை ஆகும், அவர்தமைப் பிழையாமல் தொழுதிட லபிப்பது கைபெரிது செய்திடு புண்ணியம்-அவர்களைத் தவறாமல் வணங்கக் கிடைப்பது கைகள் பெரிதும் செய்த நல்வினையாகும், வீண்நெறி செலாமல் அவர் பணிவிடை லபிப்பது தன்மேனி செய்திடு புண்ணியம்-பயனற்ற வழிகளிற் செல்லாமல் அவர்களுக்குத் தொண்டு செயக் கிடைப்பது தன் மெய் செய்திட்ட நல்வினை ஆகும், விழைவொடு அவர் சொற்படி நடந்திட லபிப்பது மிகக் பூருவ புண்ணியம் - விருப்பத்துடன் அவர் கூறியவாறு நடந்திடும் பேறு கிடைப்பது முற்பிறப்பிற் செய்த பெரிய வினையாகும்.

(வி-ரை) நான் என்னும் செருக்கு ஆணவமலம். (யாவும் இறைவனாலே நடைபெறுகின்றன என்ற எண்ணத்தைவிட்டு நானே செய்கிறேன் என்று நினைத்துக்கொள்வது) நல்லாரைக் காண்பதும் நன்றே எனத் தொடங்கும் ஔவையார் பொன்மொழி இங்குக் கருதத்தக்கது.

(க-து) பெரியோர்களைக் கண்டு பழகி அவர் சொற்படி நடந்துவருவது நல்லது.

**எஎ. பிறந்தநாளுடன் வரும் வாரத்தின் பலன்**

சென்மநட் சத்திரத்(து) ஆதிவா ரம்வரின்
தீரா அலைச்ச லுண்டாம்
திங்களுக்(கு) ஆகில்வெகு சுகபோ சனத்தினொடு
திருமா தின் அருளும் உண்டாம்
வன்மைதரும் அங்கார வாரமவந் தாற்சிறிதும்
வாராது சுகம் தென்பார்
மாசில்பல கலைபயில்வர் மேன்மையாம் புந்தியெனும்
வாரத் துடன்கூடி னால்
நன்மைதரு குருவார மதுசேர்ந்து வரில்ஆடை
நன்மையுட னேவந் திடும்

நாரிய ருடன்போகம் மிகவும்உண்(டு) ஒருவெள்ளி
நல்லவா ரத்தில் வந்தால்
அன்மருவு பீடையுண் டாமென்பர் சனியனுக்(கு)
அமலனே! அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்ப ளீசுரதே வனே!

(இ-ள்) அமலனே-தூயவனே!, அருமை............ தேவனே!, சென்ம நட்சத்திரத்து ஆதிவாரம்வரின் தீரா அலைச்சல் உண்டாம் - பிறந்த நாளுடன் ஞாயிற்றுக்கிழமை வந்தால் நீங்காத அலைச்சல் உண்டாகும், திங்களுக்காகில் வெகு சுகபோசனத்தினொடு திருமாதின் அருளும் உண்டாம் - திங்கள் வந்தால் மிகவும் நல்லுண்டியோடு திருமகளின் அருளும் கிடைக்கும், வன்மை தரும் அங்காரவாரம் வந்தால் சிறிதும் சுகமது வாராது என்பர்-வலிய செவ்வாய்க்கிழமை வந்தாற் சற்றும் நலம் கிடையாது என்று கூறுவர். மேன்மைஆம் புந்தியெனும் வாரத்துடன் கூடினால் மாசுஇல் பலகலை பயில்வர்-உயர்வான புதன் கிழமையுடன் (பிறந்தநாள்) சேர்ந்தாற் குற்றமற்ற பல நூல்களையும் ஆராய்வார், நன்மைதரு குருவாரமது சேர்ந்துவரில் ஆடை நன்மையுடனே வந்திடும்-நலந்தரும் வியாழக்கிழமை சேர்ந்து வந்தால் ஆடைகள் நலம்பெறக் கிடைக்கும், ஒரு நல்ல வெள்ளி வாரத்தில் வந்தால் நாரியருடன் மிகவும் போகம் உண்டு - ஒப்பற்ற நல்ல வெள்ளிக்கிழமையில் வந்தாற் பெண்களின் இன்பம் மிகவும் கிடைக்கும். சனியனுக்கு அல்மருவு பீட உண்டாம் என்பர் - சனிக்கிழமை வந்தால் மயக்கந்தரும் நோய் உண்டாகும் என்பர்.

(வி-ரை) அல்-இருள். இது மயக்கத்தை யுணர்த்தியது.

**எஅ. ஏது?**

பொன்னாசை உள்ளவர்க்(கு) உறவேது? குருவேது?
பொங்குபசி யுள்ள பேர்க்குப்
போதவே சுசியேது? ருசியேது? மயல்கொண்டு
பொதுமாதர் வலைலி ழியிலே
எந்நாளும் அலைபவர்க்(கு) அச்சமொடு வெட்கமே(து?)
என்றென்றும் உறுகல் விமேல்
இச்சையுள பேர்க்கதிக சுகமேது? துயிலேது?
வெளிதாய் இருந்து கொண்டே
பன்னாளும் அலைபர்க்(கு) இகழேது? புகழேது?
பாரிலொரு வர்க்க திகமே
பண்ணியிடு மூடருக்(கு) அறமேது மறமலால்?
பகர்நிரயம் ஒன்று ளதுகாண்!
அன்னான வருகரி உரித்தணியும் மெய்யனே!
அமலனே! அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுரதே வனே!

(இ-ள்) அல்நாண வருகரி உரித்து அணியும் மெய்யனே-இருள் நாணுமாறு (கருநிறத்துடன்) வந்த யானையின் தோலை உரித்து அணியும் மேனியனே!,அமலனே-குற்றம் அற்றவனே!. அருமை......தேவனே! பொன்ஆசை உள்ளவர்க்கு உறவுஏது குருஏது-பொருளாசை பிடித்தவர்க்குச் சுற்றமும் ஆசிரியரும் இல்லை. பொங்குபசி உள்ளபேர்க்குப் போதவே சுசி ஏது ருசி ஏது-மிகுதியான பசியுடையோர்க்கு நிறைந்த தூய்மையும் உணவினிமையும் பார்த்தல் இயலாது, பொதுமாதர் விழிவலையிலே எந்நாளும் அலைபவர்க்கு அச்சமொடு வெட்கம் ஏது-பொதுப் பெண்களின் கண்வீச்சில் எப்போதும் அகப்பட்டு உழல்பவர்க்கு அச்சமும் நாணமும் இல்லை, என்றென்றும் உறுகல்விமேல் இச்சையுள் பேர்க்கு அதிக சுகம் ஏது துயில் ஏது-எப்போதும் சிறந்த கல்வியின் மேல் விருப்பம் உடையோர்க்கு மிக வசதியிலும் தூக்கத்திலும் மனம் நாடாது, எளிதாய் இருந்துகொண்டே பலநாளும் அலைபவர்க்கு இகழ்ஏது புகழ்ஏது - எளிய வாழ்வில் இருந்து பலநாளும் திரிபவர்க்கு இகழ்ச்சியும் புகழ்ச்சியும் இல்லை. பாரில் ஒருவர்க்கு அதிகமே பண்ணியிடும் மூடவர்க்கு மறம் அலால் அறம் ஏது - உலகில் ஒருவருக்குத் துன்பத்தையே செய்யும் பேதையருக்குப் பாவமன்றிப் புண்ணியம் இல்லை, பகர்நிரயம் ஒன்று உளது-கூறப்படும் நரகம் ஒன்று இருக்கிறது.

(வி-ரை) அதிகம் - அளவுகடத்தல்: (வரம்பு மீறுதல்) எனவே தீமை செய்தலைக் குறிக்கும்.)

**எ. மழைநாள் குறிப்பு**

சித்திரைத் திங்கள் பதின் மூன்றுக்கு மேல்நல்ல
சீரான பரணி மழையும்
தீ(து)இல் வைகாசியிற் பூரணை கழிந்தபின்
சேரும்நா லாநா ளினில்

ஒத்துவரு மழையும், அவ் வானியில் தேய்பிறையில்
ஓங்கும்ஏ காத சியினில்
ஒளிர்பரிதி வீழ்பொழுதில் மந்தார மும் மழையும்
உண்டா யிருந்(து)ஆ டியில்
பத்திவரு தேதி ஐந்தினில் ஆதி வாரமும்
பகரும் ஆவணிமூ லநாள்
பரிதியும் மறைந்திடக் கனமழை பொழிந்திடப்
பாரில்வெகு விளைவும் உண்டாம்
அத்தனே! பைங்குவளை மாலையணி மார்பன் ஆம்
அண்ணல் எம(து) அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுரகிரிவளர்
அறப்பளீ சுரதே வனே!

(இ-ள்). அத்தனே-தலைவனே! பைங்குவளை மாலை அணி மார்பன் ஆம் அண்ணல் எமது அருமை மதவேள்-பசிய குவளை மலர்மாலை அணிந்த மார்பனாகிய பெருமை மிக்க எம் அரிய மதவேள்,அனுதினமும்..... தேவனே! சித்திரை திங்கள் பதின்மூன்றுக்கு மேல் நல்ல சீரான பரணி மழையும்-சித்திரைத் திங்களிற் பதின்மூன்று நாட்களுக்குமேற் புகழ்பெற்ற பரணிநாளிற் பெய்யும் மழையும், தீது இல் வைகாசியிற் பூரணை கழிந்தபின் சேரும் நாலாம் நாளினில் ஒத்துவரும் மழையும்-குற்றம் அற்ற வைகாசித் திங்களில் முழுமதிக்குப் பிறகு வரும் நாலாம் நாளிற் சரியாகி வரும் மழையும், அ ஆனியில் தேய் பிறையில் ஓங்கும் ஏகாதசியினில் ஒளிர் பரிதி வீழ்பொழுதில் மந்தாரமும் மழையும் அநத ஆனித் திங்களில் தேய்பிறையிலே சிறப்புறும் ஏகாதசியில் ஒளிவிடும் ஞாயிறு மறையும்போது மந்தாரத்துடன் பெய்யும் மழையும், உண்டாயிருந்து-பெய்திருந்து, ஆடியில் பத்தி வரு தேதி ஐந்தினில் ஆதிவாரமும் ஆடித் திங்களில் ஒழுங்காக வரும் ஐந்தாம் நாளில் ஞாயிற்றுக்கிழமையும், பகரும் ஆவணி மூலநாள் பரிதியும் மறைந்திடக் கனமழை பொழிந்திட- கூறப்படும் ஆவணித்திங்களில் மூலநாளில் ஞாயிறு மறைந்தபிறகு, பெருமழை பெய்தலும் நேர்ந்தால், பாரில் வெகு விளைவும் உண்டாம்-உலகில் மிகுந்த விளைவு உண்டாகும்.

(வி-ரை) குவளை மலர்மாலை வேளாளருக்குரியது.

**அ. பயனில்லாதவை**

சமயத்தில் உதவாத நிதியம்ஏன்? மிக்கதுயர்
சார்பொழுது இலாத கிளைஏன்?
சபை முகத்(து)உன வாத கல்விஏன்? எதிரிவரு
சமரத்(து) இலாத படைஏன்?
விமலனுக்(கு) உதவாத பூசைஏன்? நாளும்இருள்
வேளைக்(கு) இலாத சுடர்ஏன்?
வெம்பசிக்(கு) உதவாத அன்னம்ஏன்? நீடுகுளிர்
வேளைக்(கு) இலாத கலைஏன்?
தமதுதளர் வேளைக்(கு)இ லாதஓர் மனைவிஏன்?
சரசத்(து) இலா தநகை ஏன்?
சாம்மரண காலத்தில் உதவாத புதல்வன் ஏன்?
தரணிமீ(து) என்பர் கண்டாய்!
அமரர்க்கும் முனிவர்க்கும் ஒருவர்க்கும் எட்டாத
ஆதியே! அருமைமத வேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுரதே வனே!

(இ-ள்) அமரர்க்கும் முனிவர்க்கும் ஒருவர்க்கும் எட்டாத ஆதியே-வானவர்க்கும் முனிவர்க்கும் பிறரெவர்க்கும் நெருங்கற்கியலாத முதல்வனே!, அருமை........ தேவனே!, தரணிமீது சமயத்தில் உதவாத நிதியம் ஏன்-உலகில் வேண்டிய காலத்திற் பயன் படாத செல்வம் எதற்கு?. மிக்கதுயர் சார்பொழுது இலாத கிளை ஏன்-மிகுதியான துன்பம் உண்டானபோது பயன்படாத உறவு எதற்கு?, சபைமுகத்து உதவாத கல்வி ஏன்-

அவைக்களத்திற் பயன்படாத படிப்பு எதற்கு?, எதிரி வரும் சமரத்து இலாத படை ஏன்-பகைவன் எதிர்த்த போரிற் பயன்படாத படை எதற்கு? விமலனுக்கு உதவாத பூசை ஏன்-தூயவனான இறைவனுக்குப் பயன்படாத வழிபாடு எதற்கு?. நாளும் இருள் வேளைக்கு இலாத சுடர் ஏன்-எப்போதும் இருட்பொழுதில் ஒளிதராத விளக்கு எதற்கு? வெம்பசிக்கு உதவாத அன்னம் ஏன்-கொடிய பசியைத் தணிக்கப் பயன்படாத உணவு எதற்கு?, நீடு குளிர் வேளைக்கு இலாத கலை ஏன்-நீண்ட குளிர் காலத்திற்குப் பயன்தராத ஆடை எதற்கு? தமது தளர் வேளைக்கு இலாத ஓர் மனைவி ஏன்-தங்களின் சோர்வு காலத்திற்கு உடனிராத ஒருமனைவி எதற்கு?, சரசத்து இலாத நகை ஏன்-விளையாட்டின்போது இல்லாத நகைப்பு எதற்கு? சரம் மரண காலத்தில் உதவாத புதல்வன் ஏன்-உயிர் விடும் இறுதிப் போதிற்பயனற்ற மகன் எதற்கு?, என்பர்-என்று (அறிஞர்) கூறுவர்.

(வி-ரை) விமலனுக்கு வழிபாடில்லாமற் பிற தெய்வங்களை வணங்குதல் தகாது. கண்டாய்: முன்னிலை அசைச்சொல்.

**அக. மறையோர் சிறப்பு**

ஓராறு தொழிலையும் கைவிடார்: சௌசவிதி
ஒன்றுதப் பாது புரிவார்
உதயாதி யிற்சென்று நீர்படிகு வார்: காலம்
ஒருமூன்றி னுக்கும் மறவா(து)
ஆராய்ந்து காயத்ரி யதுசெபிப் பார்: நாளும்
அதிதிபூ சைகளபண் ணுவார்ணு
யாகாதி கருமங்கள் மந்தரகிரி யாலோபம்
இன்றியே செய்து வருவார்
பேராசை கொண்டிடார்: வைதிகநன் மார்க்கமே
பிழையா(து) இருக்கும் மறையோர்
பெய்யெனப் பெய்யும்முகில்: அவர் மகிமையெவர்களும்
பேசுவதற்(கு) அரித ரிதுகாண்!
ஆரார் நெடுஞ்சடில அமலனே! எனையாளும்
அண்ணலே! அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுரதே வனே!

(இ-ள்) ஆர் நெடுஞ்சடில் அமலனே-ஆத்திமாலை தரித்த நீண்ட சடையை உடைய தூயவனே!, எனை ஆனை அண்ணலே-என்னைக் காக்கும் பெரியோனே! அருமை...........தேவனே! வைதிக நல்மார்க்கமே பிழையாது இருக்கும் மறையோர்-மறைநெறியாகிய நல்ல வழியிலே தவறாது செல்லும் மறையவர்கள், ஓர் ஆறு தொழிலையும் விடமாட்டார், சௌசவிதி ஒன்று தப்பாது புரிவார்-தூய்மை விதிகளை ஒன்றேனும் விடாமற் செய்வார், உதய ஆதியில் சென்று நீர் படிகுவார்-வைகறையிலே போய் நீராடுவார், காலம் ஒரு மூன்றினுக்கும் மறவாது ஆராய்ந்து காயத்திரியது

செபிப்பார்-முக்காலத்தினும் மறவாமல் காயத்ரி மந்திரத்தைத் தெரிந்து ஓதுவார், நாளும் அதிதி பூசைகள் பண்ணுவார்-எப்போதும் விருந்தினரை ஓம்புவார், யாகாதி கருமங்கள் மந்திர கிரியாலோபம் இன்றியே செய்து வருவார்-வேள்வி முதலிய தொழில்களை மந்திரமும் செயலும் குறைவு இல்லாமற் செய்து வருவார், பேராசை கொண்டிடார்-பேராசை கொள்ள மாட்டார், பெய்யென முகில் பெய்யும்-(இவர்கள்) பெய் என்று கூறியவுடன் மழை பெய்யும், அவர் மகிமை எவர்களும் பேசுவதற்கு அரிது, அரிது-அவருடைய மேன்மையாவராலும் கூற இயலாதது! இயலாதது!

(வி-ரை) காண்: அசைச்சொல். ஆறு தொழில். ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல். (வேட்டல்-வேள்வி செய்தல். வேட்பித்தல்-வேள்வி செய்வித்தல்.) உதயம்-கதிரவன் தோன்றும் காலம். உதயாதி என்பது அதற்கும் முற்காலம். ஆகவே, வைகறை. கைதிகம் வேத சம்பந்தமானது (தந்திதாந்த நாமம்)

**அஉ. அரசர் சிறப்பு**

மனுநீதி முறைமையும், பரராசர் கொண்டாட
வரும்அதிக ரணவீ ரமும்
வாள் விசய மொடுசரச சாதன விசேடமும்
வாசிமத கரியேற் றமும்
கனமாம் அமைச்சரும், பலமான துர்க்கமும்
கைகண்ட போர்ப்ப டைஞரும்
கால தேசங்க ளெவையும்
இனிதாய் அறிந்ததா னாபதிக ளொடுசமர்க்(கு)
இளையாத தளகர்த் தரும்
என்றும்வற் றாததன தானிய சமுத்திரமும்
ஏற்றம்உள குடிவர்க் கமும்,
அனைவோரும் மெச்ச இங்(கு) இவையெலாம், உடையபேர்
அரசராம்! அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுரதே வனே!

(இ-ள்) அருமை.........தேவனே!, மனுநீதி முறைமையும்-மனுவினால் ஏற்படுத்தப்பெற்ற அரசநெறி ஒழுங்கும், பாராசர் கொண்டாடவரும் அதிக ரணவீரமும் - மற்ற மன்னர்கள் புகழுமாறு காணப்படும் சிறந்த போர் வீரமும், வாள் விசயமொடு சரசாதன விசேடமும்-வாள்கொண்டு வெற்றிபெறுவதுடன் இனிய முறையிலே தொழிலை முடித்துக் கொள்ளும் சிறப்பும், வாசி மதகரி ஏற்றமும்-குதிரையேற்றமும் யானையேற்றங்களில் பயிற்சியும் கனம்ஆம்அமச்சரும்-பெருமை மிக்க மந்திரிகளும் பலமான துர்க்கமும்-உறுதியான அரணும், கைகண்ட போர்ப்படைஞரும்-பயிற்சி பெற்ற போர் வீரரும், கசரத பதாதியும்-யானை தேர் காலாட்களும், துரகப்ரவாகமும்-குதிரை வெள்ளமும், காலதேசங்கள் எவையும் இனிதாய் அறிந்த தானாபதிகளோடு-காலம் இடம் முதலானவற்றையெல்லாம் நன்றாக உணர்ந்த

தானத் தலைவருடனே, சமர்க்கு இளையாத தளகர்த்தரும்-போர்க்குப் பின்னிடையாத படைத்தலைவரும், என்றும் வற்றாத தனதானிய சமுத்திரமும்-எப்போதும் குறையாத பொன்னும் தானியமும் ஆகிய பெருக்கும், ஏற்றம் உள குடிவர்க்கமும்-(வெளிநாட்டில் இருந்தும்) வந்து சேரும் இயல்புடைய பலவகைக் குடிகளும், இங்கு இவையெலாம் அனைவோரும் மெச்ச உடைய பேர் அரசர் ஆம்-இங்குக் கூறப்பட்ட இவற்றையெல்லாம் யாவரும் புகழப்பெற்றவர்களே அரசராவர்.

(வி-ரை) இரணம்-புண், புண்படும் வீரம் போர்க்கள வீரம் வாள்விசயம்-போரில் வெற்றி பெறுதல் (தண்டம்). சரச சாதனம்-சாமபேத தானங்கள். எனவே நால்வகைச் சூழ்ச்சிகளாயின. அரண்: மதில், நீர், காடு, மலை என்னும் நால்வகை அரண்கள். ஏற்றம்: மேன்மை யென்பதைவிடக்(குடீ) யேற்றத்தைக் குறிப்பதே சிறப்பாகும்.

**அங. வணிகர் சிறப்பு**

நீள்கடல் கடந்திடுவர்: மலையாள மும்போவர்!
நெடிதுதூ ரந்தி ரிந்தும்
நினைவுதடு மாறார்கள்: சலியார்கள்: பொருள்தேடி
நீள்நிலத்(து) அரசு புரியும்
வாளுழவ ரைத்தமது கைவசம் செய்வார்கள்:
வருமிடம் வராத இடமும்
மனத்தையும் அறிந்துதவி ஒன்றுநூ றாயிட
வளர்ப்பர்: வரு தொலைதொ லைக்கும்
ஆள்விடுவர்: மலிவுகுறை வதுவிசா ரித்திடுவர்
அள(வு)இல்பற் பலச ரக்கும்
அமைவுறக் கொள்வர்: விற் பார்கணக் கதிலணுவும்
அறவிடார்: செலவு வரிலோ
ஆளியொத் தேமலையின் அளவும் கொடுத்திடுவர்
அருள் வைசியர்! அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுரதே வனே!

(இ-ள்) அருமை......... தேவனே!, அருள் வைசியர்-அருளுடைய மனத்தவரான வணிகர், நீள் கடல் கடந்திடுவர்- (வணிகத்திற்கு)ப் பெருங்கடலையும் கடந்து செல்வர், மலையாளமும் போவர்-மலைநாடுகளையும் சுற்றுவர், நெடிது தூரம் திரிந்தும் நினைவு தடுமாறார்கள்-நீண்ட தொலைவு அலைந்தாலும் எண்ணத்திலே கலக்கம் அடையார், சலியார்கள்-சோர்வு அடையார், பொருள்தேடி நீள் நிலத்து அரசுபுரியும் வாள் உழவரைத் தமது கைவசம் செய்வார்கள்-பொருளையீட்டி வைத்துக்கொண்டு, பெரிய நாட்டை ஆளும் வாளேந்திய அரசர்களைத் தம் கையிற் போட்டுக்கொள்வார்கள், வரும் இடம் (உம்) வாராத இடமும் மனத்தையும் அறிந்து உதவி-(பொருள்) வரும் இடத்தையும் வராத இடத்தையும் (பொருள் வாங்குவோர்) உள்ளத்தையும் தெரிந்து (பொருள்) கொடுத்து, ஒன்றுநூறா ஆயிட வளர்ப்பர்-ஒரு பொருள் நூறாக வளரும்படி யீட்டுவர், வருதொலை

தொலைக்கும் ஆள்விடுவர்-(பொருள்) வரக்கூடிய நீண்ட தொலைவுக்கும் ஆளைச் செலுத்துவர், மலிவு குறைவது விசாரித்திடுவர் - (பொருள்) மிகுதியையும் குறைவையும் கேட்டறிவர் அளவு இல் பற்பல சரக்கும் அமைவுறக்கொள்வர்-எல்லை அற்ற பலவகையான பொருள்களையும் பொருத்தம் அறிந்து வாங்குவர், விற்பார்-விற்பார்கள், கணக்கதில் அணுகவும் அறவிடார் - கணக்கினில் இம்மியும் பிசக விட மாட்டார்கள், செலவு வரிலோ ஆளி யொத்தே மலையின் அளவும் கொடுத்திடுவர் - !ஒழுங்கான) செலவு வந்தாலோ சிங்கம் போல அஞ்சாமல் மலையளவாயினும் செலவழிப்பார்கள்

(வி-ரை) வாள் உழவர்: அரசர் (வாளினாலே தமது முயற்சியைச் செய்வோர்)

**அச. வேளாளர் சிறப்பு**

யசனாதி கருமமும் தப்பாமல் வேதியர்
இயற்றிநல் லேர்பெ றுவதும்
இராச்யபா ரஞ்செய்துமுடிமன்னர் வெற்றிகொண்(டு)
என்றும்நல் லேர்பெ றுவதும்,
வசனாதி தப்பாது தனதா னியந் தேடி
வசியர்நல் லேர்பெ றுவதும்
மற்றுமுள பேரெலாம் மிடியொன்றி டாதிக
வளமை பெற்(று) ஏர்பெ றுவதும்,
திசைதோறும் உள்ளபல தேவா லயம்பூசை
செய்யுநல் லேர்பெ றுவதும்
சீர்கொண்ட பைங்குவளை மரலைபுனை வேளாளர்
செய்யும்மே ழிப்பெ ருமைகாண்
அசையாது வெள்ளிமலை தனில்மேவி வாழ்கின்ற
அண்ணலே! அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுரதே வனே!

(இ-ள்) வெள்ளிமலைதனில் அசையாது: மேவிவாழ்கின்ற அண்ணலே-வெள்ளிமலையில் எப்போதும் பொருந்தி வீற்றிருக்கும் பெரியோனே!, அருமை......... தேவனே! வேதியர் யசனம்ஆதி கருமமும் தப்பாமல் இயற்றி நல்ஏர் பெறுவதும்-மறையவர் வேள்வி முதலிய தொழில்களைத் தவறாமற் செய்து பேரழகு பெறுவதும், முடிமன்னர் என்றும் வெற்றிகொண்டு இராச்சிய பாரம் செய்து நல் ஏர் பெறுவதும் - முடியரசர் எப்போதும் பகைவரை வென்றிகொண்டு, ஆட்சி புரிந்து பேரழகடைவதும், வசியர் வசம் ஆதி தப்பாது தனதானியம் தேடி நல் ஏர் பெறுவதும் - வணிகர் சொல் முதலிய பிறழாமல் பொன்னும் தானியமும் ஈட்டிப் பேரழகு பெறுவதும், மற்றும் உள பேரெலாம் மிடி என்றிடாது அதிக வளமை பெற்று ஏர் பெறுவதும் - மேலும் உள்ள யாவரும் வறுமை என்று கூறாமல் மிக்க வளம் பெற்று அழகுறுவதும், திசைதோறும் உள்ள பல தேவாலயம் பூசை செய்யும் நல் ஏர் பெறுவதும் - எல்லாத் திக்கினும் இருக்கும் பல திருக்கோயில்களும் வழிபாடு பெற்று நல்லழகு பெறுவதும் சீர் கொண்ட பைங்குவளை மாலை புனை வேளாளர் செய்யும் மேழிப்

பெருமை-புகழ் பெற்ற பசிய குவளை மாலை அணிந்த வேளாளர் புரியும் உழவின் பெருமையாகும்.

(வி-ரை) யசனம்-வேள்வி. வைசியர் என்பது வசியர் எனச் செய்யுள் விகாரம் பெற்றது.

**அரு. தானாபதி, அமைச்சன், படைத்தலைவன்**

தன்னரசன் வலிமையும், பரராசர் எண்ணமும்
சாலமேல் வருக ருமமும்
தானறிந்(து) அதிபுத்தி உத்தியுண் டாயினோன்
தானாதி பதியா குவான்:
மன்னவர் மனத்தையும், காலதே சத்தையும்
வாழ்குடி படைத்தி றமையும்
மந்திரா லோசனை யும்எல்லாம் அறிந்தவன்
வளமான மதிமந் திரி:
துன்னிய படைக்குணம், கரிபரி பரீட்சையே
சூழ்பகைவர் புரிசூழ்ச் சியும்
தோலாத வெற்றியும் திடமான சித்தியுள
சூரனே சேனா திபன்
அன்னையினும் நல்லமலை மங்கைபங் காளனே!
அனகனே! அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுரதே வனே!

(இ-ள்) அன்னையினுமந் நல்ல மலைமங்கை பங்காளனே-தாயினும் நல்லருள் புரியும் மலைமகளை யிடப் பாகத்திற்கொண்டவனே!, அனகனே-தூயவனே!, தநன் அரசன் வலிமையும் பரராசர் எண்ணமும் சால மேல்வருகருமமும் தான் அறிந்து-தன் அரசனுடைய ஆற்றலும் மாற்றரசர் நினைவும் நன்றாகப் பின்வரும் அலுவலும் ஆராய்ந்து, அதி புத்தி, உத்தி உண்டாயினோன் தான் அதிபதி ஆகுவான்-சிறந்த அறிவும் சூழ்ச்சியும் பொருந்தியவன் தானத்தலைவன் எனப்படுவான், மன்னவர் மனத்தையும், கால தேசத்தையும், வாழ்குடி படைத்திறமையும், மந்திர ஆலோசனையும் எல்லாம்- அரசர்களின் கருத்தையும், காலத்தையும், இடத்தையும், வாழ்கின்ற குடிபடைகளின் ஆற்றலையும், ஆராய்ச்சித் திறனும் ஆகிய யாவற்றையும், அறிந்தவன் வளமான மதி மந்திரி-தெரிந்தவன் தேர்ச்சிபெற்ற அறிவுடைய அமைச்சனாவான், துன்னிய படைக்குணம்-செறிவான் படைகளின் இயல்பும், கரிபரி பரீட்சையே-யானை குதிரைகளின் தேர்ச்சியும், சூழ் பகைவர் புரி சூழ்ச்சியும்-சூழ்ந்துள்ள மாற்றலர் செய்யும் சூழ்ச்சியும், தோலாத வெற்றியும் - பின் வாங்காத வெற்றியும் திடமான சித்தி(யும்) உறுதியான சித்தியும், உள சூரனே சேனாதிபன்- உடைய வீரனே படைத்தலைவன் ஆவான்.

(வி-ரை) துன்னுதல்-நெருங்குதல்: ஆகவே செறிவாயிற்று, சித்தி-நினைத்து முடித்தல். சூர்-அச்சம். சூரன்-அஞ்சத்தக்கவன் (வீரன்).

**அசு. அரசவைக் கணக்கர்**

வரும்ஓலை உத்தரத்(து) எழுதிவரு பொருளினால்
வரவிடுப் போன்ம னதையும்,
மருவிவரு கருமமும் தேசகா லத்தையும்
வருகரதலாம லகமாய்
விரைவாய் அறிந்தரசர் எண்ணிலஎண் ணினையள(வு)
இடஎழுதவாசிக் கவும்
வெற்றிகொண்டேபெரிய புத்தியுடையோன்புவியின்
மேன்மைரா யசகா ரன்ஆம்
கருவாய்அறிந்து தொகை யீராறு நொடியினிற்
கடிதேறற் றிடக்கு றைக்கக்
கடுகையொரு மலையாக மலையையொரு கடுகுமாக்
காட்டுவோன் கருணீ கன் ஆம்:
அருவாகி உருவாகி ஒளியாகி வெளியாகும்
அண்ணலே! அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுரதே வனே!

(இ-ள்) அரு ஆகி உரு ஆகி ஒளி ஆகி வெளி ஆகும் அண்ணலே-அருவமாகவும் உருவமாகவும் ஒளியாகவும் வெளியாகவும் உள்ள பெரியோனே!, அருமை..... தேவனே! வரும் ஓலை உத்தரத்து எழுதிவரு பொருளினால்-வருகின்ற ஓலையின் புறத்திலே எழுதிவிட்ட பொருளைக் கொண்டு, வரவிடுப்போன் மனதையும்-ஓலையை விட்டவன் உள்ளத்தையும், மருவி வரு கருமமும்-அவன் விரும்பிய தொழிலையும், சேத காலத்தையும்-இடத்தையும் காலத்தையும், வரு காதல் ஆமலகம் ஆய் விரைவாய் அறிந்து-உள்ளங்கையில் உள்ள நெல்லிக்கனியாக நொடியில் உணர்ந்து, அரசர் எண்ணில் எண்ணினை அளவு இட எழுத வாசிக்கவும்-அரசருடைய கருத்தில் உள்ள கருத்தை மதிப்பிடவும் எழுதவும் வாசிக்கவும், வெற்றி கொண்டே பெரிய புத்தியுடையோன் புவியின் மேன்மை ராயச காரன் ஆம் - தேர்ச்சி பெற்றுப் பேரறிவு உடையோன் உலகிலே பெருமை பெற்ற அரசாங்க எழுத்தாளன் ஆவான், தொகை வருவாய் அறிந்து ஈராறு நொடியினில் கடிது ஏற்றிடக் குறைக்க - ஒரு தொகையை மனத்தில் உணர்ந்து பன்னிரு விநாடியில் விரைவாகக் கூட்டவும் குறைக்கவும், கடுகை ஒரு மலைஆக மலையை ஒரு கடுகும் ஆ(க)க் காடடுவோன் கருணீகன் ஆம் - கடுகை மலை போலவும் மலையைக் கடுகுபோலவும் ஆக்கிக் காண்பிக்க வல்லவன் அரசாங்கக் கணக்கன் ஆவான்.

(வி-ரை) உத்தரம்-பின் எனவே ஓலையின் புறம் எழுத்தாளரும் கணக்குப் பார்ப்போரும் கணக்கர் எனவே வழங்கப்படுகின்றனர். ஆமலகம்-நெல்லி, கரதலாமலகம் என்பது வெளிப்நபடை என்பதை விளக்கும் உவமச் சொல் கையில் வைத்திந்நக்கும் பொருள் தெரிவதைப் போலத் தெளிவித்தல் என்பதே அதனால் விளக்கப்படும் பொருள்.

**அஎ. சீற்றத்தின் கொடுமை**

கோபமே பாவங்களுக்கெலாம் தாய்தந்தை!
கோபமே குடிகெ டுக்கும்!
கோ பமே ஒன்றையும் கூடிவர வொட்டாது!
கோபமே துயர் கொ டுக்கும்!
கோபமே பொல்லாது! கோபமே சீர்கேடு!
கோபமே உறவ றுக்கும்!
கோபமே பழிசெயும்! கோபமே பகையாளி!
கோபமே கருணை போக்கும்!
கோபமே ஈனமாம்! கோபமே எவரையும்
கூடாமல் ஒருவ னாக்கும்!
கோபமே மறலிமுன் கொண்டுபோய்த் தீயநர
கக்குழி யினில்தள் ளுமால்!
ஆபத்தெ லாந்தவிர்த்(து) என்னையாட்கொண்டருளும்
அண்ணலே! அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுரதே வனே!

(இ-ள்) ஆபத்து எலாம் தவிர்த்து என்னை ஆட்கொண்டருளும் அண்ணலே-இடையூறுகளை யெல்லாம் நீக்கி என்னை ஏற்றுக்கொண்டருளும் பெரியோனே!, அருமை.....தேவனே!, கோபமே பாவங்களுக்கு எல்லாம் தாய்-தந்தை சினமே எல்லாப் பாவங்களுக்கும் அன்னையும் அப்பனும் ஆகும், கோபமே குடிகெடுக்கும்-சினமே குடியைக்கெடுக்கும், கோபமே ஒன்றையும் கூடிவரவொட்டாது-சினமே எதனையும் அடைய விடாது, கோபமே துயர்கொடுக்கும்-சினமே துயரந்தரும், கோபமே பொல்லாது-சினமே கெட்டது, கோபமே சீர்கேடு-சினமே புகழைக் கெடுப்பது, கோபமே உறவு அறுக்கும்-சினமே உறவைத் தவிர்க்கும், கோபமே பழி செயும் - சினமே பழியை யுண்டாக்கும், கோபமே பகையாளி-சினமே மாற்றான், கோபமே கருணை போக்கும்-சினமே அருளைக் கெடுக்கும், கோபமே ஈனம் ஆம் - சினமே இழிவாகும், கோபமே எவரையும் கூடர்மல ஒருவன் ஆக்கம் - சினமே ஒருவரையும் சேர்க்காமல் தனியனாக்கும், கோபமே மறலிமுன் கொண்டுபோய்த் தீய நரகக்குழியில் தள்ளும் - சினமே காலன் இழுத்துச்சென்று கொடிய நரகக் குழியிலே வீழ்த்தும்.

(வி-ரை) ஆல்: அசை. ஆறுவது சினம் என்றார் ஔவையார். தீராக் கோபம் போராய் முடியும் என்றார் நறுந்தொகையார்

(க-து) சினத்தைத் தவிர்த்தல் வேண்டும்.

**அஅ. பல்துறை**

தாம்புரி தவத்தையும் கொடையையும் புகழுவோர்

தங்களுக்(கு) அவைத ழுவுறா!
சற்றும்அறி வில்லாமல் அந்தணரை நிந்தைசெய்
தயவிலோர் ஆயுள் பெரு கார்!
மேம்படு நறுங்கலவை மாலைதயிர் பால்புலால்
வீடுநற் செந்நெல் இவைகள்
வேறொருவர் தந்திடினும் மனுமொழி யறிந்தபேர்
விலைகொடுத் தேகொள்ளுவார்!
தேன்கனி கிழங்குவிற(கு) இலையிவை யனைத்தையும்
தீண்டரிய நீசர் எனினும்
சீர்பெற அளிப்பரேல் இகழாது கைக்கொள்வர்
சீலமுடை யோர்என் பரால்!
ஆன்கொடி யுயர்த்தவுமை நேசனே!ஈசனே!
அண்ணலே! அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுரதே வனே!

(இ-ள்) ஆன் கொடி உயர்ந்த உமை நேசனே-ஏற்றுக்கொடியை உயர்த்திய உமையன்பனே!, ஈசனே-செல்வத்தையளிப்பவனே!, அண்ணலே-பெரியோனே! அருமை.....தேவனே! தாம்புரி தவத்தையும் கொடையையும் புகழுவோர் தங்களுக்கு அவைதழுவுறா - தாங்கள் செய்த தவத்தினையும் ஈகையையும் புகழ்ந்து கூறிக்கொள்வோருக்கு அவை கிடையாமற் போய்விடும், சற்றும் அறிவு இல்லாமல் அந்தணரை நிந்தை செய்த தயவு இலோர் ஆயுள் பெருகார்-சிறிதும் அறியாமல் அந்தணரைப் பழிக்கும் இரக்கமிலோர்க்கு ஆயுள் குறையும், மேம்படு நறுங்கலவை மாலை தயிர் பாலை புலால் வீடு நல் செந்நல் இவைகள்-உயர்ந்த மணமிக்க கலவைச் சந்தனம், மாலை, தயிர், பால், ஊன், வீடு, நல்ல செந்நெல் ஆகிய இவற்றை வேறு ஒருவர் தந்திடினும் மனுமொழி அறிந்தபேர் விலைகொடுத்தே கொள்ளுவார்-மற்றொருவர் கொடுத்தாலும் மனு கூறிய முறையை அறிந்தவர்கள் விலை கொடுத்துத் தான் வாங்குவார்கள், தேன் கனி கிழங்கு விறகு இலை இவை அனைத்தையும் தீண்ட அரிய நீசர் எனினும் சீர்பெற அளிப்பரேல்-தேனையுங் கனியையுங் கிழங்கையும் விறகையும் இலையையும் இவை (போன்ற) யாவற்றையும் தீண்டத்தகாத இழிந்தோரானாலும் சிறப்புறக் கொடுத்தாரானால், சீலம் உடையோர் இகழாது கைக்கொள்வர்-ஒழுக்கம் உடையோர் பழிக்காமல் ஏற்றுக்கொள்வர்.

(வி-ரை) ஆல்: ஆசை. ஈசன்-செல்வமுடையோன்.

**அ.கூ. முப்பொருள் (தத்துவத் திரயம்)**

பூதமோ ரைந்துடன், புலனைந்தும், ஞானம்
பொருந்துமிந் திரிய மைந்தும்,
பொருவலகன மேந்திரியம் ஐந்து, மனம், ஆதியாம்

புகலரிய கரணம் நான்கும்.
ஓதினோர் இவைஆன்ம தத்துவம் எனச் சொல்வர்:
உயர்கால நியதி கலையொ(டு;
ஓங்கிவரு வித்தை, ராகம், புருடன் மர்யை யென்(று)
உரைசெய்யும் ஒரே ழுமே
தீதில்வித் யாதத்வம என்றிடுவர்: இவையலால்
திகழ்சுத்த வித்தை ஈசன்
சீர்கொள்சா தாக்கியம், சத்தி, சிவம் ஐந்துமே
சிவதத்வம் என்ற றைகுவார்
ஆதிவட நீழலிற் சனகாதி யார்க்கருள் செய்
அண்ணலே! அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுரதே வனே!

(இ-ள்) ஆதிவடநீழலில் சனகாதியர்க்கு அருள் செய் அண்ணலே-முற்காலத்தில் கல் ஆலமரத்தின் நிழலில் சனகர் முதலானோர்க்கு அருள் பரந்த பெரியோனே!, அருமை.........தேவனே!, பூதம் ஒர்ஐ:ந்து-ஓர் ஐம்பூதங்களும், ஞானம் பொருந்தும் இந்திரியம் ஐந்தும்-உவமையில்லாத கன்ம இந்திரியங்கள் ஐந்தும், மனம் ஆதி ஆம் புகல் அரிய கரணம் நான்கும்-மனம் முதலிய சொல்லற்கரிய கரணங்கள் நான்கும், இவை ஆன்ம தத்துவம் என ஓதினோர் சொல்வர்-இவற்றை ஆன்ம தத்துவம் என்று கற்றறிந்தோர் கூறுவர், உயர்காலம் நியதிகலையோடு ஓங்கவரு வித்தை ராகம் புருடன் மாயை என்று உரைசெய்யும் ஒரேழுமே தீது இல் வித்யா தத்துவம் என்றிடுவர்-உயர்வாகிய காலம், நியதி, கலைகளோடு கூறப்படும் எழினையும் குற்றமற்ற வித்தியாதத்துவம் எனக் கூறுவர், இவை அலால் - இவையல்லாமல். திகழ்சுத்த வித்தை, ஈசன், சீர்காள சாதாக்கியம், சத்தி, சிவம் ஐந்துமே சிவ தத்துவம் என்று அறைகுவார்-விளங்கும் சுத்தவித்தை, ஈசன், சிறப்புடைய சாதாக்கியம், சத்தி, சிவம் (ஆகிய) ஐந்தினையும் சிவ தத்துவம் என்று கூறுவர்.

(வி-ரை) பூதம் ஐந்து: மண், நீர், அனல், வளி, வான், புலன் ஐந்து: சுவை. ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் ஞான இந்திரியம் ஐந்து: மெய்,வாய்,கண்,மூக்கு,செவி, கன்ம இந்திரியம் ஐந்து: வாக்கு, பாதம்,பாணி, பாயுரு, உபத்தம், கரணம் நான்கு: மனம், புத்தி, சித்தம், அகங்காரம், வடம்-ஆலமரம். சனகாதியர்-சனகர், சனந்தகர், சனத்குமாரர், சஹயஜாதர், ஞான இந்திரியம்: அறிவுப்பொறி. கன்மஇந்தரியம்: தொழிற்பொறி. ஆன்ம தத்துவம் உயிருடன் சேர்ந்தவை: இருபத்து நான்கு தத்துவங்கள். வித்தியாதத்துவம்: கலையுடன் சேர்ந்தவை ஏழு தத்துவங்கள். சிவதத்துவம்: இறையுடன் சார்ந்தவை: ஐந்துதத்துவங்கள் ஆக முப்பத்தாறு.

### கூ0. காமன் அம்பும் அவற்றின் பண்பு முதலியனவும்

வனசம், செழுஞ்சூத முடன், அசோ கம், தளவம்,
மலர்நீலம் இவைஐந் துமே
மாரவேள கணைகளாம்: இவைசெயும் குணம்:முளரி
மனதிலா சையையெ ழுப்பும்:
வினவில்ஒண் சூதமலர் மெய்ப்பசலை உண்டாக்கும்
மிக அசோ கம்து யர்செயும்:
வீழ்த்திடும் குளிர் முல்லை: நீலம் உயிர் போக்கிவிடும்:
மேவும்இவை செயும்அ வத்தை:
நினைவில் அது பேநோக்கம், வேறொன்றில்ஆசையறல்
நெட்டுயிர்ப் பொடுபி தற்றல்,
நெஞ்சம் திடுக்கிடுதல், அனம்வெறுத்திடல், காய்ச்சல்
நேர்தல், மௌ னம்பு ரிகுதல்,
அனைவுயிர் உண்டில்லை என்னல்ஈ ரைந்தும் ஆம்!
அத்தனே! அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுரதே வனே!

(இ-ள்) அத்தனே-தலைவனே!, அருமை........தேவனே!, வனசம் செழுஞ்சூதமுடன், அசோகம், தளவம், மலர்நீலம் இவை ஐந்துமே மாரவேள் கணைகள் ஆம்-தாமரை, வளமிகுந்த மா, அசோகு, முல்லை, மலர்ந்த நீலம் ஆகிய இவை ஐந்து மலர்களுமே காமன் அம்புகள் ஆகும்., இவை செயும் குணம்-இவை (உயிர்களுக்கு) ஊட்டும் பண்புகள், முளரி மனதில் ஆசையை எழுப்பும்-தாமரை உள்ளத்திலே காமத்தை உண்டாக்கும், வினவில் ஒண்சூதமலர் மெய்ப்பசலை உண்டாக்கும்-வினவுமிடத்துச் சிறப்புடைய மாமலர் உடலிலே பசலை நிறத்தைக் கொடுக்கும் அசோகம் மிகத் துயர்செயும்-அசோக மலர் மிகவும் துன்பத்தைக் கொடுக்கும், குளிர் முல்லைவீழ்த்திடும்-குளிர்ந்த முல்லைமலர்(படுகையில்):விழச்செய்யும், நீலம் உயிர் போக்கிவிடும்-நீலமலர் உயிரை ஒழிக்கும், மேவும் இவை செயும் அவத்தை-பொருந்தும் இவை உண்டாக்கும் நிலைகளாவன: நினைவில் அதுவே நோக்கம்-எண்ணத்தில் அதுவே கருதுதல், வேறு ஒன்றில் ஆசை அறல்-மற்றொன்றில் ஆசை நீங்கல், நெட்டுயிர்ப்பொடு பிதற்றல்-பெருமூச்சுடன் பிதற்றுதல், நெஞ்சம் திடுக்கிடுதல் -உள்ளம் திடுக்கிடல், அனம் வெறுத்திடல்-உணவில் வெறுப்பு, காய்ச்சல்-உடல் வெதும்புதல்,நேர்தல்-மெலிதல்,

மௌனம் புரிகுதல்-பேசாதிருத்தல், அனைய உயிர் உண்டு இல்லை என்னல்-ஆசையுற்ற உயிர் உண்டோ இல்லையோ என்னும் நிலையடைதல், ஈ:ரைந்தும் ஆம் - (ஆகிய இவை) பத்தும் ஆகும்.

(வி-ரை) வேள்-விருப்பத்தைச் செய்வோன். ஒண்மை-சிறப்பு. அவத்தை-நிலை. அனம்-அன்னம் (இடைக்குறை)

**கூக. காமன் துணைப்பொருள்கள்**

வெஞ்சிலை செழுங் வில் நாரிகரு வண்டினம்:
மேல்விடும் கணைகள் அலராம்:
வீசிடும் தென்றல்தேர்: பைங்கிள்ளை யேபரிகள்:
வேழம்கெ டாத இருள்ஆம்:
வஞ்சியர் பெருஞ்சேனை: கைதைஉடை வாள்: நெடிய
வண்மைவெறு கடல்மு ரசம்ஆம்:
மகரம்ப தாகை: வரு கோகிலம் காகளம்:
மனதேபெ ரும்போர்க் களம்:
சஞ்சரிக இசைபாடல்: குமுதநே யன் கவிகை:
சார்இரதி யேம னைவிஆம்:
தறுகண்மட மாதாஇள் முலமகுடம் ஆம்:அல்குல்
தவறா(து) இருக்கும் இடம்ஆம்:
அஞ்சுகணை மாரவேட்(கு) என்பர்: எளியோர்க்கெலாம்
அமுதமே! அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுரதே வனே!

(இ-ள்) எளியோர்க்கு எலாம் அமுதமே-ஆற்றல் அற்றவர்கள் எல்லோருக்கும் அமுதம் போன்றவனே!, அருமை...... தேவனே! அஞ்சுகணை மார வேட்கு-ஐந்து அம்புகளையுடைய காமனுக்கு, வெம் சிலை செழுங் கழை-கொடிய வில் வளம் பொருந்திய கரும்பாகும், நாரி கருவண்டு இனம்-அம்பு கரிய வண்டின் கூட்டம் (ஆகும்), மேல் விடும் கணைகள் அலர் ஆம் -(உயிர்களின்) மேல் எய்யும் அம்புகள் மலர்களாகும், தேர் வீசிடும் தென்றல்-தேர் உலவும் தென்றற் காற்று (ஆகும்), பரிகள் பைங்கிள்ளையே-குதிரைகள் பச்சைக் கிளிகளே (ஆகும்), வேழம் கெடாத இருள் ஆம்-யானை அழியாத இருளாகும், பெருஞ்சேனை வஞ்சியர்-மிகுபடை பெண்கள் (ஆவர்), உடைவாள் கைதை-உடைவாள் தாழை மடல் (ஆகும்), முரசம் நெடிய வண்மைபெறு கடல் ஆம்-போர் முரசு நீண்ட கொடைத்தன்மை பொருந்திய கடலாகும், பதாகை மகரம்-கொடி மகா மீன் ஆகும், காகளம் வரு கோகிலம்-சின்னம் (வேனிலில்) வரும் குயிலாகும், பெரும் போர்க்களம் மனதே - பெரிய போர்க்களம் (உயிர்களின்) உள்ளமே ஆகும். பாடல் சஞ்சாரி இசை-பாட்டுக்கள் வண்டின் இசை ஆகும். கவிகை குமுத நேயன்-குடை சந்திரன் (ஆவான்) மனைவி சார் இரதியே ஆம்-காதலி (அழகு) பொந்திய இரதியே ஆவாள், மகுடம் தறுகண் மடமாதர் இளமுலை ஆம்-முடி அஞ்சாமை பொருந்திய இளம் பெண்களின் இளமுலைகள் ஆகும், தவறாது

இருக்கும் இடம் அல்குல் ஆம் - எப்போதும் விடாமல் வீற்றிருக்கும் இடம் (பெண்களின்) அல்குல் ஆகும், என்பர்-என்று அறிஞர் கூறுவர்.

(வி-ரை) சஞ்சரிகம் - வண்டு. குமுதம்-அல்லி, அல்லியின் காதல் சநதிரன் என்பர், சந்திரனைக் கண்டால் அல்லி மலரும். வெம்மை+சிலை-வெஞ்சிலை. பசுமை+கிள்ளை-பைங்கிள்ளை. செழுமை+கழை-செழுங்கழை. பெருமை+சேனை-பெருஞ்சேனை. உடை வாள் - அரையிற் கட்டப்படும் வாள்.

**கூஉ. பகை கொள்ளத் தகாதவர்**

மன்னவர்,அமைச்சர், துர்ச்சனர்,கோளர், தூதரொடு
மாறாத மர்மம் உடையோர்
வலுவர், கருணீகர், மிகு பாகம்செய்(து) அன்னம்
மடையர்,மந்திரவா தியர் (இடும்
சொன்னம் உடையோர்புலையர், உபதேசமதுசெய்வோர்
சூழ்வயித் தியர் கவிதைகள்
சொற்றிடும் புலவர்இவர் பதினைந்து பேரொடும்
சொப்பனந் தனில் ஆகிலும்
நன்னெறி அறிந்தபேர் பகைசெய்தி டார்கள் இந்
நானிலத்(து) என்பர் கண்டாய்!
நாரியோர் பாகனே! வேதாக ம்பரவும்
நம்பனே! அன்பர் நிதியே!
அன்னம் ஊர் பிரமனும் கண்ணனும் காணாத
அண்ணலே! அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுரதே வனே!

(இ-ள்) நாரி ஓர் பாகனே-உமையொரு பங்கனே!, வேத ஆகமம் பரவும் நம்பனே-மறையும் ஆகமமும் போற்றும் சிறப்புடையவனே! அன்பர் நிதியே அன்பரின் சேமப்பொருளே!,அன்னம் ஊர் பிரமனும் கண்ணனும் காணாத அண்ணலே-அன்னத்தில் ஊர்ந்து வரும் நான்முகனும் திருமாலும் கண்டுபிடிக்க இயலாத பெரியோனே!, அருமை.......தேவனே! மன்னர்-அரசர்,அமைச்சர்-மந்திரிகள்,துர்ச்சனர்-தீயோர், கோளர்-கோள் சொல்லுவோர், தூதரொடு-தூதர்களுடன்,மாறாத மர்மம் உடையோர்-நீங்காத செற்றம் கொண்டவர்கள் வலுவர்-வலிமையுடையோர், கருணீகர்-கணக்கர் மிகுபாகம் செய்து அன்னம் இடும் மடையர்-சிறந்த சமையல் செய்து உணவிடும் சமையற்காரர், மந்திரவாதியர்-மந்திரஞ் செய்வோர், சொன்னம் உடையோர்-செல்வமிக்கவர்கள் புலையர்-இழிந்தோர், உபதேசமது செய்வோர்-உபதேசியர், சூழ் வயித்தியர்-ஆராய்ச்சியுடைய மருத்துவர், கவிதைகள் சொற்றிடும் புலவர்-செய்யுள் இயற்றும் புலவர்கள், இவர் பதினைந்து பேரொடும் சொப்பனந்தனில் ஆகிலும் நன்னெறி அறிந்தபேர் இந்நானிலத்துப் பகை செய்திடார்-இவர்கள் பதினைந்து வருடனும் கனவிலும் நல்ல நெறி அறிந்தவர்கள் இவ்வுலகிற்பகை கொள்ளார், என்பர்-என்று கூறுவர்.

(வி-ரை) கண்டாய்: முன்னிலை அசைச்சொல்: நன்மை+நெறி-நன்னெறி, மடை-சோறு. மடையர்-சமையல் செய்வோர்-உபதேசம் புரிவோர்-ஆன்மநெறி கற்பிக்கும் ஆசிரியர்.

**கூங. நன்மை தீமை பகுத்துப் பயன் கொள்ளுதல்**

சுவைசேர் கரும்பைவெண் பாலைப் பருத்தியைச்
சொல்லும்நல் நெல்லை எள்ளைத்
தூயதெங் கின்கனியை எண்ணாத துட்டரைத்
தொண்டரைத் தொழுதொ ழும்பை
நவைதிரு மாறுகண் டித்தே பயன்கொள்வர்
நற்றமிழ்க் கவி வாணரை
நலமிக்க நாரியர் தமைப்
புவிமீதில் உபகார நெஞ்சரைச் சிறுவரைப்
போர்வீர ரைத்தூ யரைப்
போதவும் பரிவோ டிதஞ்செய்ய மிகுபயன்
புகழ் பெறக் கொள்வர் கண்டாய்
அவமதி தவிர்த்(து)என்னை ஆட்கொண்ட வள்ளலே!
அண்ணலே! அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுரதே வனே!

(இ-ள்) அவமதி தவிர்த்து என்னை ஆட்கொண்ட வள்ளலே-தீய அறிவை நீக்கி என்னை அடிமை கொண்ட வள்ளலே அண்ணலே-தலைவனே!மை மதவேள்......தேவனே! சுவைசேர் கரும்பை-சுவை பொருந்திய கரும்பையும், வெண் பாலை-வெண்மையான பாலையும், பருத்தியை-பருத்தியையும், சொல்லும் நல் நெல்லை-சொல்லப்படுகின்ற நல்ல நெல்லையும், எள்ளை-எள்ளையும் தூய தெங்கின் கனியை-தூய்மை பொருந்திய தென்னம் பழத்தையும், எண்ணாத துட்டரை-மதிக்காத தீயவர்களையும், தொண்டரை-அடிமையாளரையும், தொழுதொழும்பை-குற்றேவல் செய்வோரையும், நவை தீருமாறு-குற்றம் நீங்கும்படி, கண்டித்தே-கண்டனம் செய்தே, பயன் கொள்வர்-அவர்களால் ஆன பயனைப் பெறுவார்கள், நல் தமிழ் வாணரை-நல்ல தமிழைக் கற்றுச் சிறந்த புலவரையும், நலம் மிக்க செழுமலரை-நன்மை மிகுந்த செழித்த பூவையும், ஓவியம் எனத் தக்க நயம் உள்ள நாரியர் தமை-ஓவியத்தில் எழுதிய பாவை என்று சொல்லத் தகுந்த அழகுள்ள பெண்களையும், புவிமீதில் உபகார நெஞ்சரை - பூமியின் மீதில் உதவி செய்ய வேண்டுமென்று மனம் படைத்தோரையும், சிறுவரை-சிறுவரையும், போர் வீரரை-போர்வீரர்களையும்,தூயவரை-தூய்மை,பொருந்திய பெரியோர்களையும், போதவும் பரிவோ மிகுபயன் புகழ் பெறக் கொள்வர்-மிகுதியான அன்போடு மிகுந்த பயன்களை அவர்களுக்குப் புகழ் உண்டாகும்படி கொள்வார்கள்.

(வி-ரை) தொழும்பர்-குற்றேவல் செய்வோர். நவை-குற்றம்.

**கூச. முப்பத்திரண்டு அறங்கள்**

பெறுமில், பெறு வித்தலொடு, காதோலை, நாள்தொறும்
பிள்ளைகள் அருந்தி டும்பால்
பேசரிய சத்திரம், மடம்,ஆ வுரிஞ்சுகல்
பெண்போகம், நாவிதன், வணான்,
மறைமொழிக ணாடி, தண்ணீர், தலைக்(கு) எண்ணெய்பசு
வாயின்உறை, பிணம்அ டக்கல்,
வாவி,இற்முஉயிர்:மட்டல்,தின்பொருள், அடைக்காய்
வழங்கல், சுண் ணாம்பு தவுதல
சிறையுறு பவர்க்கமுது, வேற்றிலம் காத்தல், பொழில்
செய்தல், முன் னூலின் மனம்
திகழ்விலங்(கு) ஊண், பிச்சை,அறுசமய ருக்குண்டி
தேவரா லயம், அவுடதம்,
அறைதல்கற் போர்க்கன்னம் நாநெட்(டு) அறங்களும்
அன்னைசெயல்::அருமை மதவேள் (முன்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுரதே வனே!

(இ-ள்) அருமை......தேவனே!, பெறும் இல்-மகவு பெறுதற்கு வீடு விடுதல், பெறு வித்தலொடு-மகவு பெறுதற்கு வேண்டியவற்றை உதவுதல் காது ஓலை-காதணி அளித்தல், நாள்தொறும் பிள்ளைகளை அருந்திடும் பால்-அன்றாடம் குழந்தைகள் பருகும் பால் அளித்தல், பேச அரிய சத்திரம் - சொலற்கரிய சத்திரம் கட்டல், மடம்-(துறவிகள் இருக்கும்) மடம் அமைத்தல், ஆவுரிஞ்சு கல்-பசுக்களின் தினவு நீக்கும் கல்நடுதல், பெண்போகம்-பெண்களுக்கு இன்பம் அளித்தல், நாவிதன்-அம்பட்டனுக்கு உதவுதல், வணான்-வண்ணானுக்கு உதவுதல், மறைமொழி கண்ஆடி-மறைவில் கூறுமாறு கண்ணாடி யீதல் தண்ணீர்-நீர் வேட்கையைத் தணித்தல் தலைக்கு எண்ணெய்-தலைக்கு எண்ணெய் கொடுத்தல், பசுவின் வாய் உறை-பசுக்களுக்குத் தீனி, பிணம் அடக்கல்- (ஆதரவு அற்ற) பிணத்தை அடக்கம் செய்தல், வாவி-குளம் வெட்டுதல், இறும் உயிர் மீட்டல்-இறக்கும் உயிரைக் காத்தல், தின்பொருள்-தின்பண்டம் அளித்தல், சுண்ணாம்பு உதவுதல்,சிறை உறுபவர்க்கு அமுது-சிறையில் அகப்பட்டவர்க்கு உணவு கொடுத்தல், வேறு இலம் காத்தல்-பிறர் துயரைப் போக்குதல்,பொழல் செய்தல்-சோலை வைத்தல், முன் நூலின் மணம்-பழைய நூல் முறைப்படித் திருமணம் செய்வித்தல், திகழ் லிலங்கு ஊண்-விளங்கும் விலங்குகளுக்கு உணவளித்தல், பிச்சை-இரப்போர்க்கு ஈதல், அறு சமயருக்கு உண்டி-அறுவகை அகச் சமயத்தாருக்கும் உணவு அளித்தல்,தேவராலயம்-திருக்கோயில் கட்டுதல், அவுடதம் - மருந்து கொடுத்தல், அறைதல் கற்போர்க்கு அன்னம்-பாடம் படிப்போர்க்கு உணவு அளித்தல், நாலெட்டு அறங்களும் - (ஆகிய) முப்பத்திரண்டு அறங்களும், முன் அன்னை செயல்-முற்காலத்தில் உமையம்மையார் காஞ்சியிற் செய்தவை ஆகும்.

(வி-ரை) இலம்-வறுமை (துயரைக் குறிக்கிறது)

**கூரு. இல்லறம்**

தந்தைதாய் சற்குருவை இட்டதெய் வங்களைச்
சன்மார்க்கம் உளமனை வியைத்
தவறாத சுற்றத்தை ஏவாத மக்களைத்
தனைநம்பி வருவோர் களைச்
சிந்தை மகிழ்(வு) எய்தவே பணிவிடைசெய் வோர்களைத்
தென்புலத் தோர்வ றிஞரைப்
தீதிலா அதிதியைப் பரிவுடைய துணைவரைத்
தேனுவைப் பூசுரர் தமைச்
சந்ததம் செய்கடனை யென்றும் இவை பிழையாது
தான்புரிந் திடல்இல் லறம்
சாருநலம் உடையராம் துறவறத் தோரும் இவர்
தம்முடன் உடையராம் துறவறத் தோரும் இவர்
தம்முடன் சரியா யிடார்!
அந்தரி உயிர்க்கெலாந் தாயதனினும் நல்லவட்(கு)
அன்பனே! அருமை மதவேள்,
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுரதே வனே!

(இ-ள்) அந்தரி உயிர்க்கு எலாம் தாய் தனினும் நல்லவட்கு அன்பனே-பார்வதியும் எவ்வுயிர்க்கும் அன்னையினும் நல்லவளுமான உமையம்மைக்குக் காதலனே! அருமை......தேவனே!, தந்தைதாய் சற்குருவை - தந்தை தாயரையும் நல்லாசிரியனையும், இட்ட தெய்வங்களை-வழிபடு தெய்வங்களையும், சன்மார்க்கம் உள மனைவியை-நல்லொழுக்கமுடைய இல்லாளையும், தவறாத சுற்றத்தை- நீங்காத உறவினரையும், ஏவாத மக்களை-குறிப்பறிந்து செய்யும் பிள்ளைகளையும், தனைநம்பி வருவோர்களை-தன்னை நம்பிப் புகலடைந்தோர்களையும், சிந்தை மகிழ்வு எய்தவே பணிவிடை செய்வோர்களை-மனம் மகிழத் தொண்டு புரிவோர்களையும், தென்புலத்தோர் வறிஞரை-தென்புலன்த்தாரையும், ஏழைகளையும், தீது இலாஅதிதியை-குற்றமற்ற விருந்தினரையும், பரிவு உடைய துணைவரை-அன்புமிக்க உடன்பிறப்பாளர்களையும், தேனுவை-பசுக்களையும், பூசுரர்தமை-அந்தணர்களையும், (ஆதரித்தலும்) சந்ததம் செய்கடனை-எப்போதும் செய்யும் கடமைகளையும்,இவை-(ஆகிய) இவற்றை, சந்ததம் பிழையாது-எப்போதும் தவறாமல். தான் புரிந்திடல் இல்லறம்-ஒருவன் இயற்றுவது இல்லறம் எனப்படும், சாரும் நலம் உடையர் ஆம் துறவறத்தோரும் இவர் தம்முடன் சரிஆயிடார்-பொருந்திய நன்மையையுடையராகிய துறவு நெறியிலே தவறாது நிற்பாரும் இவர்களுடன் ஒப்பாகமாட்டார்.

(வி-ரை) அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை, அஃதும் பிறன்பழிப்ப தில்லாயின் நன்று என்னும் வள்ளுவர் வாய்மொழியை ஒப்புநோக்குக.

**கூசு. புராணம்**

தலைமைசேர்பௌடிகம் இலிங்கம், மார்க்கண்டம், எழில்
சாரும்வா மனம், மச்சமே,
சைவம், பெருங்கூர்மம், வருவராகம், கந்த
சரிதமே, பிரமாண் டமும்,
நிலைமைசேர் இப்பத்தும் உயர்சிவ புராணம்ஆம்
நெடியமால் கதை வை ணவம்
நீதிசேர் காருடம், நாரதம், பாகவதம்
நீடிய புராணம் நான்காம்
கலைவளர்சொல் பதுமமொடு, பிரமகை வர்த்தமே
கமலா லயன்கா தைஆம்:
கதிரவன் காதையே சூரிய புராணமாம்
கனல் காதை ஆக்கி னேயம்
அலைகொண்ட நதியும்வெண் மதியும்அறு கும்புனையும்
அத்தனே! அருமை மதவேள்
அனுதினமும மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுரதே வனே!

(இ-ள்) அலைகொண்ட நதியும் வெண்மதியும் அறுகும்புனையும் அத்தனே-திரையெறியும் கங்கையாற்றையும் வெண்திங்களையும் அறுகையும் மிலைந்த தலைவனே!,அருமை.........தேவனே!, தலைமைசேர் பௌடிகம், இலிங்கம், மார்க்கண்டம், எழில்சாரும் வாமனம், மச்சம், சைவம், பெருங்கூர்மம், வருவராகம், கந்தசரிதம, பிர்மாண்டமும்-நிலைமைசேர் இப்பத்தும் உயர் சிவபுராணம் ஆம் நிலையான இவை பத்தும் உயர்ந்த சிவபுராணங்கள் ஆகும், நெடிய மால் கதை-நெடியவனான திருமாலின் கதைகள் வைணவம், நீதிசேர் காருடம், நாரதம், பாகவதம்-நீடிய புராணம் நான்கு ஆம்-பெருமையுடைய புராணங்கள் நான்கும் ஆம், கலைவளர் சொல் பதுமமொடு பிரமகை வர்த்தமே கமலாலயன் காதை ஆம்-கலைவல்லார் கூறும் பதுமபுராணமும் பிரமகைவர்த்த புராணமும் தாமரை மரைவன் காதைகள் ஆகும், கதிரவன் காதையே சூரிய புராணம் ஆம். கனல் காதை ஆக்கினேயம்-அக்கினியின் கதை ஆக்கினேய புராணம்.

(வி-ரை) சைவபுராணம் பத்து:வைணவ புராணம் நான்கு: பிரமபுராணம் இரண்டு: கதிரவன் புராணம் ஒன்று: ஆக்கினேய புராணம் ஒன்று : ஆகப் பதினெண் புராணங்கள்.

**கூஎ. புகழ்ச்சி**

பருகாத அமு(து) ஒருவர் பண்ணாத பூடணம்
பாரில்மறை யாத நிதியம்
பரிதிகண்(டு) அலராத நிலவுகண்(டு) உலராத
பண்புடைய பங்கே ருகம்
கருகாத புயல், கலைகள் அருகாத திங்கள், வெங்
கானில்உறை யாத சீயம்:
கருதரிய இக்குணம் அனைத்தும் உண் டானபேர்
காசினியில் அருமை யாகும்!

தெரியவுரை செய்யின்மொழி, கீர்த்தி, வரு கல்வியொடு
சீரிதயம், ஈகை, வதனம்
திடமான வீரம், இவை யென்(று) அறிகு வார்கள்!
செகமெலாம் கொண்டா டவே (இச்
அருள்கற்ப தருஎன்ன ஓங்கிடும் தானதுரை
ஆகு(ம்) அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுரதே வனே!

(இ-ள்) இச் செகம் எலாம் கொண்டாட-இவ்வுலகெங்கும் புகழ, அருள் கற்பதரு என்ன-அருள் மிகுந்த கற்பகத் தருவைப்போல,ஓங்கிடும் தானதுரை ஆகும்-உயர்ந்த கொடைத்தலைவன் ஆகிய, எமது அருமை.......தேவனே!, பருகாத அமுது-உண்ணாத அமுதம், ஒருவர் பண்ணாத பூடணம்-ஒருவராற் செய்யப்படாத அணிகலம், பாரில் மறையாத நிதியம் - உலகில் அழியாத செல்வம் பரிதிகண்டு அலராத நிலவு கண்டு உலராத பண்புடைய பங்கேருகம்-ஞாயிற்றைக் கண்டு மலராததும், திங்களைக் கண்டு வாடாததும் ஆகிய தன்மையுடைய தாமரை, கருகாத புயல்-கருநிறம் பெறாது பெய்யும் முகில், கலைகள் அருகாத திங்கள்-கலைகள் குறையாத திங்கள், வெங்கானில் உறையாத சீயம்-கொடிய காட்டில் வாழாத சிங்கம், கருத அரிய இக்குணம் அனைத்தும் உண்டானபேர் காசினியில் அருமையாகும்-நினைவிற்கு எட்டாத இப்பண்புகள் யாவும் உடையவர் இவ்வுலகிற் கிடைப்பது அருமையாகும். (எனினும், இவைகட்கு ஒப்பாக) தெரிய உரை செய்யின்-விளங்க எடுத்துக்கூறினால், (முறையே), மொழி, கீர்த்தி, வருகல்வியோடு, சீர்இதயம், ஈகை, வதனம், திடமான வீரம் இவை என்று அறிகுவார்கள்-உரையும், புகழும், வளரும் கல்வியும், சிறப்புள்ள உள்ளமும், கொடையும், முகமும், அசையாத வீரமும் ஆகிய இவைகள் என்று தெரிந்து கொள்வார்கள்.

(வி-ரை) அமுது மொழி, அணிகலம் கீர்த்தி, நிதியம் கல்வி, பங்கேருகம் இதயம், புயல் ஈகை, திங்கள் வதனம், சீயம் வீரம் என ஒப்பிடுக. இங்கு மதவேளின் ஈகச் சிறப்புக் கூறப்பட்டுள்ளது.

**கூஅ. திருமால் அவதாரம்**

சோமுகா சுரனைமுன் வதைத்தமரர் துயர்கெடச்
சுருதிதந் ததுமச் சம்ஆம்:
சுரர்தமக்(கு) அமுதுஈந்த(து) ஆமையாம்: பாய்போற்
சுருட்டிமா நிலம்எ டுத்தே
போமிரணி யாகதன உயிருண்ட(து) ஏனமாம்:
பொல்லாத கனகன் உயிரைப்
போக்கியது நரசிங்கம்: உலகளந்(து) ஓங்கியது
புனிதவா மனமூர்த் திஆம்:
ஏமுறும் இராவணனை வென்றவன் இரகவன்
இரவிகுலம் வேர றுத்தோன்
ஏர்பர சிராமன்: வரு கண்ணனொடு பலராமன்

இப்புலி பயந்த விர்த்தோர்
ஆமினிய கற்கிஇனி மேல்வருவ(து): இவைபத்தும்
அரிவடிவம்: அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுரதே வனே!

(இ-ள்) அருமை.......தேவனே!, முன் சோமுக அசுரனை வதைத்து அமரர் துயர் கெடச் சுருதி தந்து மச்சம் ஆம்-முற்காலத்தில் சோமுகன் என்னும் அசுரனைக் கொன்று வானவர் துன்பங் கெடும்படி செய்து, மறைகளைக் கொண்டுவந்தது மீன் தோற்றம் ஆகும், சுரர் தமக்கு அமுது ஈந்தது ஆமைஆம்-வானவர்க்கு அமுதளிக்கக் கொண்ட தோற்றம் ஆமை ஆகும்,மாநிலம் பாய்போற் சுருட்டி எடுத்தே போம் இரணியாக்கதனை உயிர் உண்டது ஏனம் ஆம்-பெரிய நிலத்தைப் பாயைப் போற் சுருட்டி எடுத்துச் செல்லும் இரணியாக்கன் உயிரைப் பருகியது பன்றி ஆகும், பொல்லாத கனகன் உயிரைப் போக்கியது நரசிங்கம்-கொடிய இரணியன் உயிரை ஒழித்தது நரசிங்கம் ஆகும், உலகு அளந்து ஓங்கியது புனித வாமன மூர்த்தி ஆம்-உலகத்தை (மாவலியிடம் தானம் பெற்று) அளக்க நெடிய உருக்கொண்டது வாமன வடிவம் ஆகும், இரவிகுலம் வேர் அறுத்தோன் எர் பரசு இராமன்-கதிரவன் மரபை அடியுடன் ஒழித்தவன் அழகிய கோடரி ஏந்திய பரசுராமன் ஆவான், ஏம் உறும் இராவணனை வென்றவன் இராகவன்-செருக்கு அடைந்திருந்த இராவணனை வெற்றிகொண்டவன் இரகுமரபிற் பிறந்த இராமன் ஆவான்,இப்புவி பயம் தவிர்த்தோர் பரு பலராமனொடு கண்ணன்-இவ்வுலகின் அச்சத்தை நீக்கப் பிறந்துவந்தோர் பலராமனும் கண்ணனும் ஆவர், இனிமேல் வருவது இனிய கற்கி ஆம்-இனிமேல் தோன்றக்கூடியது இனிய கற்கி ஆகும், இவை பத்தும் அரிவடிவம்-இவை பத்தும் திருமாலின் உருவங்கள்.

(வி-ரை) பரசுராமன் இராமனுக்கு முன்பே இருந்தவனாகையாலும், பலராமனும் கண்ணனுக்கு முன் பிறந்தவன் ஆகையாலும் அம்முறைபற்றி மாற்றிக் கூறப்பட்டன. வாமனன்-குள்ளன்.வாமனனே திரிவிக்கிரமன் எனும் உலகளந்த பேருருவம் எடுத்தோன். ஆகையால், புனித வாமன மூர்த்தி உலகளந்து ஓங்கியது என்றார்.

**கூகூ. சிவமூர்த்தி**

பிறைசூடி, உமைநேசன்,விடையூர்தி,நடமிடும்
பேரியன், உயர் வதுவை வடிவன்,
பிச சாடனன், காம தகனன், மற லியைவென்ற
பெம்மான், புரந் தகித்தோன்,
மறமலி சலந்தரனை மாய்த்தவன், பிரமன்முடி
வௌவினோள், வீரே சுரன்,
மருவுநர சிங்கத்தை வென்றஅரன், உமைபாகன்
வனசரன், கங்கா ளனே,
விறல்மேவு சண்டேச ரட்சகன், கடுமாந்தி

மிக்கசக் கரம்உ தவி னோள்
விநாயகற்(கு) அருள்செய்தோன், குகன்உமையுடன் கூடி
மிளிர்ஏக பாதன், சுகன்
அறிவரிய தட்சிணா மூர்த்தியொ(டு) இலிங்கம்ஆம்
ஐயனே! அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுரதே வனே!

(இ-ள்) பிறைசூடி-பிறையணிந்தோன், உமைநேசன்-உமையின் காதலன்(உமாமகேசன்), விடை ஊர்தி-சேக்கிழான் (இடபவூர்தி), நடம் இடும் பெரியன்-நடனம் இடும் அண்ணல், உயர் வதுவை வடிவன்-உயர்ந்த திருமணக் கோலத்தான், பிச்சாடனன்-பிச்சை யெடுப்போன் , காமதகனன்-மாரனை எரித்தோன், மறலியை வென்ற பெம்மான்-காலனை உதைத்த பெரியோன், புரம் தகித்தோன்-முபபுரத்தை எரித்தவன், மறம் மலி சலந்தரனை மாய்த்தவன்-வீரம் நிறைந்த சலந்தரனைக் கொன்றவன், பிரமன் முடி வௌவினோன்-பிரமன் தலையைக் கிள்ளினோன், வீரேசுரன் - (வீரபத்திரன்), மருவும் நரசிங்கத்தை வென்ற அரன்-பொருந்திய நரசிங்கத்தை மாய்த்த அரன்(சரபேசுரன்), உமை பாகன்-உமை பங்கன்(அர்த்தநாரீசன்), வனசரன்-வேடன், கங்காளன் - என்பு அணிந்தோன், விறல் மேவு சண்டேச ரட்சகன்-வலிமை பொருந்திய சண்டேசருக்கு அருளியவன், கடுமாந்தி-நஞ்சுண்டவன், மிக்க சக்கரம் உதவினோன்- (திருமாலுக்கு) உயர்ந்த சக்கரத்தைக் கொடுத்தவன், விநாயகருக்கு அருள் செய்தோன்-மூத்த பிள்ளையாருக்கு அருளியவன், குகன் உமையுடன் கூடி-முருகன் உமை ஆகிய இருவருடன் கூடியவன் (சோமாஸ்கந்தமூர்த்தி,மிளிர் ஏகபாதன் - விளங்கும் ஒற்றைத் திருவடியான், சுகன்-இன்ப வடிவமானவன், அறிவு அரிய தட்சிணாமூர்த்தியொடு-அறிய இயலாத தக்கிணா மூர்த்தியுடன், இலிங்கம் ஆம்-இலிங்கமும் ஆகிய, ஐயனே-தலைவனே!, அருமை.........தேவனே!

(வி-ரை) சிவபெருமான் கொண்டருளியமூர்த்தி (வடிவம்) இருபத்தைந்தாமாறு எண்ணிக் காண்க.)

**க00. கவி வணக்கம்**

மலரிதழி பைங்குவளை மென்முல்லை மல்லிகை
மருக் கொழுந்(து) உயர்கூ விளம்
மற்றும்உன வாசமலர் பத்திரம் சிலர்சூட
மணிமுடி தனிற்பொ றுத்தே
சிலரெருக் கொடுவனத் துட்பூளை பச்சறுகு
செம்முள்ளி மலர்சூ டவே
சித்தம்வைத் தவையுமங் கீகரித் திடுமகா
தேவதே வா! தெரிந்தே
கலைவலா ருரைக்குநன் கவியொ(டு) அம் பலவாண

கவிராயன் ஆகு மென்பன்
கவியையும் சூடியே மனமகிழ்ந் திடுவ(து)உன்
கடன்ஆகும் அடல்நா கமும்
அலைபெருகு கங்கையும் செழுமதிய மும்புனையும்
அமலனே! அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுரதே வனே!

(இ-ள்) அடல் நாகமும் அலைபெருகு கங்கையும் செழும்பதியமும் புனையும அமலனே-கொல்லும் பாம்பும் அலைமிகுந்த கங்கையும் நல்ல பிறையும் அணிந்த தூயவனே!, அருமை.........தேவனே!, மலர் இதழி-மலர்நத கொன்றை, பைங்குவளை-பசிய குவளை, மென்முல்லை-மெல்லிய முல்லை, மல்லிகை-மருக்கொழுந்து-உயர் கூவிளம்-உயர்ந்த வில்வம், மற்றும் உள வாச மலர்-வேறும் உள்ள மணமலர், பத்திரம்-பச்சிலைகள் (ஆகியவற்றை), சிலர் சூட-சில (அடியார்கள்) அணிவிக்க, மணிமுடிதனில் பொறுத்து-நவமணிகள் இழைத்த முடியில் ஏற்று, சிலர் எருக்கொடு வனத்துள பூளை பச்சருகு செம்முள்ளி மலர்சூட-சிலர் எருக்கமலருடன் காட்டிற் கிடைக்கும், பூளைப்பூவும், பசுமையான அறுகம்புல்லும், சிவந்தமுள்ளி மலரும் அணிவிக்க, சித்தம்வைத்து அவையும் அங்கீகரித்திடும் மகாதேவ தேவா-மனம் வைத்து அவற்றையும் ஏற்று அருளும் பெருமைமிக்க தேவ தேவனே!, கலைவலர் தெரிந்து உரைக்கும் நன்கவியொடு-கலையில் வல்லவர்கள் ஆராய்ந்து கூறும் நல்ல பாக்களுடன், அம்பலவாண கவிராயன் ஆகும் என் புன்கவியையும் சூடியே-அம்பலவாண கவிராயன் ஆகிய என் இழிந்த பாவையும் அணிந்தே, மனம் மகிழ்ந்திடுவது உன் கடன் ஆகும்-திருவுள்ளம் களத்தருளுவது உன் கடமை ஆகும்.

**அறப்பசீசுரசதகம் மூலமும் உரையும் முற்றிற்று.**

# செய்யுள் முதற்குறிப்பு அகரவரிசை


அடைக்கலம் எனத்தேடி
அருக்கனுக்கு அதிரோகி
இரப்பவன் புலிமீதில்
ஈனசா திகள்குடி
உம்பர்கோன்(க.வாழ்த்து)
உள்ளன்பு இலாதவர்
எழுதப்படிக்க வகை
ஓராறு தொழிலையும்
கடலளவு உரைத்திடுவர்
கடலுலகில் வாழும்
கணவனுக்கு இனிய
கலங்காத சித்தமும்
கலைவலா ருக்கு அதிக
கறைபடாது ஒளிசேரும்
கற்றோர்கள் என்பதைச்
காணரிய பெரியோர்கள்
காமிக்கு முறையில்லை
காயம்ஒரு புற்பதம்
குணம்அற்ற பேய்முருங்
கூடப்பிறந்தவர்க்கு
கைவிலைக் குக்கொளும்
கொடியபொலி எருதை
கோபமே பாவங்களுக்
கோவில்இல் லாதவூர்
சதுர்யுகம் ஓரிரண்
சமயத்தில் உதவாத
சரண்எனக் காத்தவன்
சித்திரைத் திங்கள்தனில்
சித்திரை திங்கள்பதின்
சுவைசேர் கரும்பை
சுழிசுதத மாயிருந்து
செங்கதிர்க்கு உறவுபோம்
செத்தைபல கூடியொரு
செய்ந்நன்றி மறவாத
செழுமணிக்கு ஒளிஅதன்
சென்மநட் சத்திரத்து
சென்மித்த வருடமும்

சொல்லரிய வருடமும்
சொல்லரிய கருடன்
சோதிடம் பொய்யாது
சோமுகா சுரனைமுன்
தங்குலம் விளங்கிட
தந்தைாய் சற்குருவை
தந்தைதாய் மலர்முகம்
தலைமைசேர் பௌடிகம்
தலைவிரித்து எதிாவருதல்
தறிபட்ட சந்தனக்
தனக்கு வெகுபுத்தியுண்
தன்கணவன் உருவமாய்த்
தன்மட்டில் இரவாது
தன்னரசன் வலிமையும்
தன்னால் முடிகவொண்
தாதுப் பரீட்சைவரு
தாம்புரி தவத்தையும்
தாம்பூல தாரணம்
துட்டலிக டக்கலியை
தெள்ளமிர்த தாரையென
நரிமயில் பசுங்கிள்ளை
நற்பரி முகத்திலே
நாவலர் தீவினைச்
நீர்மேல் நடக்கலாம்
நீள்கடல் கடந்திடுவர்
பதின்மரில் ஒருத்தர்சபை
பருகாத அமுது
பிறைசூடி உமைநேசன்
புண்ணிய வசத்தினாற்
பூததயை இல்லாத
பூதமோ ரைந்துடன
பெண்புத்தி கேட்கின்ற
பெறுமில்பெறுவித்தலொடு
பேரான கங்காநதிக்கும்
பொய்யாத வாய்மையும்
பொன்னாசை உள்ளவர்க்கு
மலரிதழி பைங்குவளை
மனுநீதி முறைமையும்
மன்னவர் அமைச்சர்
மாதா பிதாவினுக்கு
மாறாத கலைகற்றும்
மிதமின்றி அன்னம்

மூப்பொருவர் இல்லாத
மேலான சாதியில்
யசனாதி கருமமும்
வஞ்சகர் தமைக்கடி
வரும்ஆதி வாரம்தலைக்
வரும்ஓலை உத்தரத்து
வறுமைதப் பாதுவரும்
வனசம் செழுஞ்சூத
வாம்பரி தனக்கு
வாயிகழ்வு பேசிமிகு
வாலிபந் தனில்வித்தை
வாலிபல கூபமுடன
வாழையிலை புன்னைபுரசு
வாழ்மனை தனக்கழகு
வானவர் பிதிர்க்கள்
வான்மதியை நோக்கிடின்
வெகுமானம் ஆகிலும்
வெஞ்சிலை செழுங்கழை
வெறிகொண்ட மற்கடம்
வேட்டகம் வேர்வோரும்
வேதாந்த சித்தாந்த
வேதியர்க்கு அதிகமாம்
வைதாலும் ஓர்கொடுமை